# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR

| | |
|---|---|
| Calender : | |
| Miscellaneous : | |
| Preliminary Register : CC 424/2019 | |
| Sessions : | |
| Deposition of Witness for : LW-1/PW-1 | Village: சோழபுரம் |
| Name : ரேவதி | Age :52 |
| Father's/Husband's Name : ராஜேந்திரன் | Taluk : திருவிடைமருதூர் |
| Nationality : Indian | Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 11.03.2026**

சாட்சியை திருப்பனந்தாள் தலைமைக் காவலர் திருமதி. டென்னிசாமேரி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரி ஆஜர்.**

**<u>முதல் விசாரணை</u>**:

நான் தற்போது சோழபுரம் மாரியம்மன் கோவில் தெருவில் வசித்து வருகிறேன். நான் தற்போது வீட்டுக்குடித்தனம் இதற்கு முன்பு கும்பகோணம் காசி வித்யாலயா பள்ளியில் ஆயாம்மாவாக வேலைசெய்து வந்தேன், கடந்த 04.06.2015 ம் தேதி காலை 10.30 மணி அளவில் எனது கணவர் ராஜேந்திரன் விறகு வாங்குவதற்காக சைக்கிளில் மானம்பாடி சென்றார். மானம்பாடி புதுத்தெரு அருகே எதிரி பாலமுருகன் என்பவன் பைக்கில் என் கணவர் பின்புறமாக வந்து மோதிவிட்டார். அதனை காளிமுத்து என்பவர் எனக்க போன்

மூலம் தகவல் கொடுத்தார். நான் சம்பவ இடத்திற்கு உடனே சென்றேன் என் கணவரை பார்த்த போது அவர் தலையில் அடிபட்டு இருந்தது. காயம் பட்ட எனது கணவரை கும்பகோணம் அரசு மருத்துவனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம். என் கணவர் சிகிச்சை பலனின்றி அன்றைய தினம் பகல் 12.30 மணியளவில் இறந்து விட்டார். இது சம்மந்தமாக நான் திருப்பனந்தாள் காவல் நிலையம் சென்று புகார் வாக்கு மூலம் கொடுத்தேன். அந்த புகார் வாக்கு மூலம் என்னிடம் காட்டப்படுவதுதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ 1** ஆகும். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

## <u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

விபத்து சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும் நான் குடியிருக்கும் வீட்டிற்கும் இடையிலான தூரம் சுமார் 18 கிலோமீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரிதான். பட்டியல் சாட்சி 2 காளிமுத்து மற்றும் பட்டியல் சாட்சி அபிராமி ஆகியோர்கள் எனது உறவினர்கள் என்றால் சரிதான். வழக்கு சம்மந்தமாக எனக்கு நேரடியாக தெரியாது என்று சொன்னால் சரிதான். நான் கும்பகோணம் அரசு மருத்துவமனையில் இருந்தபோது திருப்பனந்தாள் காவல் நிலைய காவலர்கள் எழுதிகொண்டு வந்த புகார் வாக்கு மூலத்தில் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். மீண்டும் மறுமுறை திருப்பனந்தாள் காவல் நிலையம் வரச்சொல்லி வாக்குமூலம் வாங்கி கொண்டார்கள் என்றால் சரிதான்.

போலீசார் எதிரி ஆஜரில் இருந்தனர். கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார்.

குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.

மறுவிசாரணை இல்லை.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

Sd/- P. Rangeswari,

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர். (FAC)**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR**

| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : CC 424/2019 | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | : LW-5/PW- 2 | Village: சோழபுரம் | |
| Name | : அபிராமி | Age | :52 |
| Father's/Husband's Name | : மகாலிங்கம் | Taluk | : திருவிடைமருதூர் |
| Nationality | : Indian | Religion | : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 11.03.2026**

சாட்சியை திருப்பனந்தாள் தலைமைக் காவலர் திருமதி. டென்னிசாமேரி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**:

நான் தற்போது கும்பகோணம் மடத்தெருவில் வசித்து வருகிறேன். அ.சா.1 எனக்கு சகோதரி. நான் தற்போது வீட்டுக்குடித்தனம் கடந்த 04.06.2015 ம் தேதி காலை 10.30 மணி அளவில் நான் வீட்டில் இருந்தபோது எனது அக்கா ரேவதி போன் செய்து மானம்பாடியில் தனது கணவர் ராஜேந்திரன் விறகு வாங்குவதற்காக சைக்கிளில் சென்றபோது பின்னால் வந்த பைக் அசா1ன் கணவர் பின்புறமாக வந்து மோதி காயம் ஏற்பட்டதாகவும் அதனை காளிமுத்து என்பவர் அசா1க்கு போன் மூலம் தகவல் கொடுத்ததாகவும் என்னிடம் அசா1

கூறினார். நான் உடனே கும்பகோணம் அரசு மருத்துவமணைக்கு சென்றேன் அசா1ன் கணவரை பார்த்த போது அவர் தலையில் அடிபட்டு இருந்தது. அசா1ன் கணவர் சிகிச்சை பலனின்றி அன்றைய தினம் பகல் 12.30 மணியளவில் இறந்து விட்டார். இது சம்மந்தமாக அசா1 திருப்பனந்தாள் காவல் நிலையம் சென்று புகார் வாக்கு மூலம் கொடுத்தார். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் முதல் விசாரணையில் கூறிய சங்கதிகள் அனைத்தும் அசா1 கூறிதான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அசா1ன் கணவர் இறந்த பின்னிட்டு மாலை 5 மணி வரை கும்பகோணம் அரசுமருத்துவனையில் நானும் அசா1ம் இருந்தோம் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளை போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

போலீசார் எதிரி ஆஜரில் இருந்தனர். கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார்.

குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.

மறுவிசாரணை இல்லை.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

Sd/- P. Rangeswari,

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர். (FAC)**